- ☐ மனிதவள மேம்பாட்டு அமைச் சகத்தின் உதவியுடன், பேரா சிரியர் பி. இராதாகிருஷ்ணன், உயர் கல்வியின் ஜனநாயக மயமாக்கம் பற்றிச் செய்துவரும் ஆய்வு நிறைவடையும் நிலையில் உள்ளது.
- ☐ 'காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெண்கள், பணி மற்றும் கருக் கலைப்பு' என்னும் பொருள் பற்றிய முனைவர் எஸ். ஆனந்தி யின் ஆய்வு நடைபெற்று வருகின்றது.

## புதிய ஆய்வுத் திட்டங்கள்

- ☐ பாரம்பரிய அறிவும் அறிவுச் சொத்துரிமையும்.

  பேராசிரியர் நிர்மல் சென் குப்தா

  நல்கை : நெட்வொர்க் ஃபார் டெவலப்மெண்ட் அண்டு என்வைர்மெண்டல் எகனா மிக்ஸ்
- ☐ உரிமைகள், பிரதிநிதித்துவம், ஏழை மக்கள் : வளர்ந்துவரும் பெரும் ஜனநாயகங்கள் — ஓர் ஒப்பீட்டாய்வு.

  பேராசிரியர் கே. நாகராஜ்

  நல்கை : டி.எஃப்.ஐ.டி.

  இணை ஆய்வு நிறுவனங்கள் : இலண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் மற்றும் இன்ஸ்டி டியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ், சசக்ஸ்.
- ☐ பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பற்றிய தகவல் பரவலாக்கத்தில் வானொலியின் பங்கு.

  முனைவர் கிருபா அனந்த பூர்

  நல்கை : ஃபோர்டு ஃபவுண் டேஷன்
- ☐ அதிகாரப் பரவலாக்கமும் பணிகளின் பகிர்வும் : தமிழ் நாடு, கர்நாடகம், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம் — ஓர் ஒப்பாய்வு.

  பேராசிரியர் வி.கே. நட்ராஜ், முனைவர் வி. சந்திரசேகர நாயுடு, முனைவர் கிருபா அனந்த் பூர்.

  நல்கை : இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலெப்மெண்ட் ஸ்டடீஸ், சசக்ஸ்.
- ☐ கர்நாடகத்தில் பாரம்பரிய அமைப்புகளும் சட்டபூர்வ மான அமைப்புகளும்.

  முனைவர் கிருபா அனந்த் பூர்

  நல்கை : இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலெப்மெண்ட் ஸ்டடீஸ், சசக்ஸ்.
- ☐ இந்தியாவில் முறைசார்ந்ததும் முறைசாராததுமான ஆளுகை

  முனைவர் கிருபா அனந்த் பூர்.

**இந்தியப் பொருளியல் கழகத்திற்கான இவ்வாண்டுத் தலைவராக முனைவர் சி.டி. குரியன் (எம்.ஐ.டி.எஸ். தலைவர் மற்றும் மதிப்புறு பேராசிரியர்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

**மதிப்புறு பேராசிரியர் ஏ. வைத்தியநாதனுக்கு '*ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ்*' பொருளியலுக்கான பங்களிப்பிற்காக வாழ்நாள் விருதினை வழங்கியுள்ளது.**

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திற்காக அதன் இயக்குனரால் வெளியிடப்பெறுவது.
79, இரண்டாம் பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை 600 020.
தொலைபேசி : 91-(44) - 441 - 1574/ 2589/ 2295/ 9771
தொலை நகல் : 91-(44) - 491 0872 இணையம் : http://www.mids.ac.in
அச்சகம் : ரிலையன்ஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை 600 020.

சென்னை
வளர்ச்சி
ஆராய்ச்சி
நிறுவனம்

எம் ஐ டி எஸ்

# வளர்முகம்

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனச் செய்தி மடல்

நவம்பர் 2002 மடல் 1 • இதழ் 1

### ஆசிரியரிடமிருந்து. . .

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் காலாண்டுச் செய்தி மடல் இது. இந்நிறுவனத்தை உருவாக்கிய முனைவர் மால்கம் ஆதிசேஷையா அவர்களின் நினைவு நாளில் (நவம்பர் 21) இதன் முதல் இதழ் வெளிவருவது பொருத்தமுடையது. இதே நாளில், வளர்ச்சி ஆய்வுகளில் சிறந்த பங்களிப்பிற்காக அளிக்கப்படும் மால்கம் ஆதிசேஷையா விருதும் பேராசிரியர் பீனா அகர்வால் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்பதும் மகிழ்ச்சி தருகிறது.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளை வெளியுலகம் பரவலாக அறியச் செய்வதே இவ்விதழின் நோக்கம். சிறப்புமிக்க உயராய்வு நிறுவனம் என்ற பெயர் பெற்றிருந்தும், எம்.ஐ.டி.எஸ். விளம்பர வெளிச்சத்தை நாடியதில்லை. இதன் காரணமாக, உரியவர்களைச் சென்றடைய இயலவில்லை என்பதை உணர்கிறோம். எம் ஆய்வுகளைப் பரந்துபட்ட சமூகம் தெரிந்து கொள்ளச் செய்வது எமது தார்மீகக் கடமை என்றும் உணர்கிறோம். கொள்கை முடிவுகளை வகுக்கவேண்டிய பொறுப்பிலிருப்போர் எம் ஆய்வுகளின் முடிவுகளை அறிய விரும்புவதும் இயல்பே. இவற்றை இயல்வதாக்கும் முறையிலேயே இச்செய்திமடல் அரங்கேறுகிறது. பொதுமை உலகு உருவாக, புறநிலையான ஆராய்ச்சியின் இன்றியமையாமையை அனைவரும் உணரவும் வாய்ப்பு அமையும் என்ற நம்பிக்கையில் இம்மடல் உங்கள் கைகளில்...

யுனெஸ்கோவின் துணைப் பொது இயக்குநராகவும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்த ராகவும் விளங்கிய முனைவர் மால்கம் ஆதிசேஷையாவின் முயற்சியாலும் தொலைநோக்காலும் உருவானது எம்.ஐ.டி.எஸ். 1971இல் தனியார் நிறுவனமாகத் தொடங்கப்பட்ட எம்.ஐ.டி.எஸ்., இந்திய அரசின் ஐ.சி.எஸ்.எஸ்.ஆர். அமைப்பின்கீழ் 1977இல் தேசிய நிறுவனமாக அடையாளம் காணப்பட்டுச் சீரமைக் கப்பட்டது. தமிழகத்தின் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றி ஆய்வு செய்வதற்கென ஓர் உயராய்வு அமைப்பு வேண்டுமென விழைந்த முனைவர் ஆதிசேஷையா தம் உழைப்பையும் செல்வத்தையும் இதற்காக முழுமையாகக் கையளித்தார்.

### உள்ளே. . .

ஆசிரியரிடமிருந்து 1

நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சிப் பங்களிப்பு 2

மால்கம் ஆதிசேஷையா விருது 3

மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியர்கள் 5

கருத்தரங்குகளும் மாநாடுகளும் 6

ஆய்வுத் திட்டங்கள் 7

## நன்றிக்குரியவர்கள்

- ✧ ரூ.1.25 கோடி அறக்கட்டளை நல்கை வழங்கிய இந்திய ரிசர்வ் வங்கி
- ✧ $ 2,25,000 அறக்கட்டளை நல்கை வழங்கிய ஃபோர்டு ஃபவுண்டேஷன்
- ✧ கணினிகள் வழங்கிய இன்ஃபோசிஸ் நிறுவனம்
- ✧ தகவல் தொழில்நுட்பக் கட்டு மானத்திற்கு ரூ.20.25 இலட்சம் வழங்கிய ஐ.சி.எஸ்.எஸ்.ஆர்.

## தமிழக அரசுக்கு நன்றி

தகவல் தொழில்நுட்பக் கட்டுமானத்தை நவீனப் படுத்துவதற்கு ரூ.20 இலட்சம் வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி.

## நூலகம்

ஆண்டுக் கட்டணம் செலுத் தப்பட்ட ஆய்வு இதழ்கள் 168. 2001—2002ஆம் ஆண்டில் 1486 நூல்கள் புதிதாகச் சேர்க்கப் பட்டன.

## நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சிப் பங்களிப்பு

நீர்வளப் பங்கீடும் பாரம்பரிய உரிமைகளும் பற்றி முனைவர் கே. சிவசுப்பிரமணியன் ஆராய்ந்து வருகிறார்.

சட்டமுறையிலான அமைப்பு களில் பெண்களின் பங்கைப் பாரம்பரிய உரிமைகள் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பது பற்றி முனைவர் கிருபா அனந்த் பூர் ஆராய்ந்து வருகிறார். வளர்ச்சித் தகவல் தொடர்பியலிலும் ஈடுபாடு கொண்டுள்ள இவர், தென்னாப்

மக்கள்தொகையியல்
பாலினம் மற்றும் தொழில்சார் மருத்துவம்
தொழிலாளர் ஆய்வுகள்
கிராமப்புற ஆய்வுகள்
பாரம்பரிய அறிவு
கோட்பாட்டுப் பார்வைகள்
நீர்வளமும் நீர்மேலாண்மையும்
அடையாள அரசியலும் இடஒதுக்கீடும்
உலக வணிக அமைப்பு, பிராந்திய வணிகம் மற்றும் ஒருங்கிணைப்பு
சமூக - பண்பாட்டு ஆய்வுகள்
அதிகாரப் பரவலாக்கம், கல்வி, ஆளுகை, குடிமைச் சமூகம்
இடஒதுக்கீடும் இந்தியச் சமூக அரசியல் நிலையும்



## ஆய்வுத் திட்டப் பயிலரங்குகள்

- *நீர் மேலாண்மை பற்றிய ஐ.டி.ஆர்.சி. ஆய்வுத் திட்டம்.* பயனுரிமையாளர்களின் கலந்துரையாடல் ஜனவரி 2002இல் நிகழ்ந்தது. நீர் மாசினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிலத்தடி நீரின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தல் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும் முகமாகப் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.
- *தலித் கிறித்தவர்களுக்கான பத்து அம்சத் திட்டம் :* டிசம்பர் 2001, பிப்ரவரி 2002இல் இரு கருத்தரங்குகள் நடைபெற்றன.
- *அரசு நிதிப் பங்கீடு பற்றிய பயிலரங்கு,* ஏப்ரல் 2002. எம்.ஐ.டி.எஸ்., சசக்ஸ் பல்கலைக்கழக வளர்ச்சி ஆய்வு நிறுவனம், ஜோகனஸ்பர்க் கொள்கை ஆய்வு மையம் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த ஆய்வாளர்களும் அரசலுவலர்களும் கலந்துகொண்டனர்.

### நிறுவனக் கருத்தரங்குகள்

4.10.2002
அறிவுச் சொத்துரிமை : பொருளியல் போக்குகள் – கே. அபர்ணா பாகீரதி

28.10.2002
இந்தியாவில் உவர்த்தன்மை – நிர்மல் சென்குப்தா.

### சிறப்புக் கருத்தரங்குகள்

21.10.2002
கேரளத்தில் நவீனத்துவம் : பிலிப்போ ஆசெல்லா, கேரலீன் ஆசெல்லா, இலண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ்.

7.11.2002
பாரம்பரிய நீர்ப்பிடிப்பு முறைகள் – கே.ஆர். சிவராமன்.

18.11.2002
டபிள்யூ.டி.ஓ.வும் எதிர்காலமும் : புதிய சவால்கள் – எல்லன் எல். பிரண்ட், இன்ஸ்டிடியூட் ஆஃப் இண்டர் நேஷனல் எகனாமிக்ஸ்.

## ஆய்வுத் திட்டங்கள்

- ☐ பாலாறு மற்றும் நொய்யல் படுகை நீர் வளமும் பகிர்வும். இரண்டாம் கட்ட ஆய்வு.
  முனைவர் எஸ். ஜனகராஜன்
  நல்கை : ஐ.டி.ஆர்.சி., கனடா.
- ☐ தலித் கிறித்தவர்களுக்கான பத்து அம்சத் திட்டத்தின் செயல்பாடு.
  முனைவர் எம். தங்கராஜ்
  நல்கை : மிஸரியர், ஜெர்மனி
  இன்னும் ஆறு திங்களில் முடிவுறும்.
- ☐ தேசியத் தொழிலாளர் நிறு வனத்தின் ஆதரவில், தமிழ் நாட்டில் தோட்டப்பயிர்த் தொழில் பற்றிய ஆய்வைப் பேராசிரியர் கே. நாகராஜ் மேற் கொண்டுள்ளார். தென் கன்னட மாவட்டத்தில் கருக் கலைப்புகளின் சமூக, பொரு ளாதார, மருத்துவப் பிரச்ச னைகள் பற்றியும் அவர் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

## கருத்தரங்குகளும் மாநாடுகளும்

### சிறப்புக் கருத்தரங்குகள்

**தமிழக நிதிநிலை**

தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழக நிதிநிலை பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு 30.11.2001இல் நிகழ்ந்தது. தமிழக அரசின் வெள்ளை அறிக்கையின் அடிப்படையில், பல உயர் அதிகாரிகளும கல்வியாளர்களும் கருத்துப் பரிமாற்றமும் விவாதமும் மேற்கொண்டனர்.

**பாரம்பரிய அறிவு : பயிலரங்குகள்**

எம்.ஐ.டி.எஸ்.இல் முக்கிய ஆய்வுக் களமாக முகிழ்த்துவரும் பாரம்பரிய அறிவு பற்றி இரு பயிலரங்குகள் நடைபெற்றன. ஆகஸ்டு 2001இல் நிறுவன அரங்கில் நிகழ்ந்த முதல் பயிலரங்கிற்கு உற்சாகமான வரவேற்பு கிடைத்தது. டபிள்யூ.டி.ஒ. வழி கவனம் பெற்றுள்ள அறிவுச் சொத்துரிமை பற்றிய பின்புலத்தில் பாரம்பரிய அறிவுத் தொடர்பான செய்திகள் விவாதிக்கப்பட்டன. புது தில்லியில் நடைபெற்ற இரண்டாம் பயிலரங்கில் இவ்விவாதம் தொடர்ந்தது. சி.எஸ்.ஐ.ஆர். மற்றும் இந்தியா இண்டர்நேஷனல் சென்டர் இதற்கு ஆதரவளித்தன.

**வளர்ச்சிக் கூட்டமைப்புக் கருத்தரங்கம்**

முதல்முறையாகத் தென்னகத்திலுள்ள ஐந்து ஐ.சி.எஸ்.எஸ்.ஆர். ஆய்வு நிறுவனங்களும் இணைந்து ஒரே கூட்டாகக் கருத்தரங்கம் நடத்தியுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கங்களின் முதல் கூட்டத்தை எம்.ஐ.டி.எஸ். நவம்பர் 2001இல் சிறப்புற நடத்தியது. இளநிலை ஆய்வாளர்கள் கட்டுரைகள் அளிக்க, மூத்த ஆய்வாளர்கள் கருத்துரை வழங்கினர். ஒரு கூட்டுக் குழு கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தது. அடுத்த கருத்தரங்கம், ஐ.எஸ்.இ.சி.யின் ஆதரவில் ஜனவரி 2003இல் பெங்களூரில் நடைபெறவுள்ளது.

**பொருளியல் பயிற்றுவித்தல் : கருத்தரங்கு**

புகழ்பெற்ற பொருளியல் வல்லுநர் டி.ஆர். காட்கில் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் பகுதியாக, பொருளியல் பயிற்றுவித்தல் பற்றிய ஒரு கருத்தரங்கு பிப்ரவரி 2002இல் ஒழுங்கு செய்யப்பட்டது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கருத்துரை வழங்கினர். காட்கிலின் பங்களிப்பைப் பற்றி பேராசிரியர் தேவதாஸ் பானர்ஜி உரையாற்றினார். காட்கிலின் மகள் பேராசிரியர் சுலபா பிராம்மே நினைவுரை ஆற்றினார். மாறிவரும் காலத்திற்கேற்பப் பொருளியல் கல்வி பயிற்றுவிப்பது பற்றிய சுவையான கருத்துகள் முகிழ்த்தன. பொருளியல் பாடத் திட்டம் இப்பின்னணியில் சீர்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது. மால்கம் — எலிசபெத் ஆதிசேஷையா அறக்கட்டளையும், ஐ.சி.எஸ்.எஸ்.ஆரும் இக்கருத்தரங்கிற்கு ஆதரவு அளித்தன.

முனைவர் மானவி மஜூம்தார், பேராசிரியர் சுப்பிரமணியன் இணைந்து எழுதிய “Capability failure and group disparities: some evidence from India for the 1980s” என்ற கட்டுரை டட்லி ஸியர்ஸ் நினைவுப் பரிசைப் பெற்றுள்ளது.



பிரிக்கா டர்பனில் நிகழ்ந்த கருத்தரங்கிலும் செப்டம்பர் 2001இல் கலந்துகொண்டார்.

தமிழகப் பண்பாடு பற்றி ஆராய்ந்து வரும் முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி பண்பாட்டு ஆவணங்களுக்கு ஆய்வுப் பதிப்புகளை உருவாக்கி வருகிறார். அண்மையில், புதுமைப்பித்தன் படைப்புகளின் செம்பதிப்பு வரிசையில் இரண்டாம் தொகுதியை வெளியிட்டுள்ளார்.

அண்மையில், துணைப் பேராசிரியராகச் சேர்ந்துள்ள முனைவர் எஸ். ஆனந்தி, பாலினம், சாதி மற்றும் அடையாள அரசியல் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டவர். இவை தொடர்பாகப் பல கட்டுரைகளும், புதிய சமூக இயக்கங்களில் தலித்துகள் பற்றி இரு குறுநூல்களும் எழுதியுள்ளார்.

பெர்லினில் உள்ள நவீனக் கீழைத்தேய ஆய்வு மையத்தில் முனைவர் பத்மினி சுவாமிநாதன் சென்ற கோடைக்காலத்தில் விருந்துநிலைப் பேராசிரியராகப் பணியாற்றி மீண்டுள்ளார். சில பொது உரைகளை ஆற்றியதோடு, தொழில் வளர்ச்சியும் உயர் கல்வியும் என்ற பொருளில் ஆய்வுக் கட்டுரையினையும் அங்கு அவர் கையளித்தார்.

சென்னை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலத்தில் பெண் தொழிலாளர் நிலை பற்றியும் ஐ.எல்.ஓ. உதவியுடன் பேராசிரியர் பத்மினி சுவாமி

### மால்கம் ஆதிசேஷையா விருது

இந்தியாவின் வளர்ச்சிப் போக்குகளையும் சிக்கல்களையும் ஆராய்வதில் சிறப்புப் பங்காற்றி வரும் ஆய்வாளர்களுக்கு மால்கம் ஆதிசேஷையாவின் பெயரில் ஒவ்வோராண்டும் விருது வழங்கப் பெறுகின்றது.

முதல் விருது, மாசாசுஸட்ஸ் தொழில்நுட்பக் கழகப் பேராசிரியர் அவிஜித் விநாயக் பானர்ஜிக்கு 2001இல் வழங்கப்பட்டது.

2002ஆம் ஆண்டுக்கான விருது, தில்லியிலுள்ள பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த பேராசிரியர் பீனா அகர்வாலுக்கு வழங்கப்படுகின்றது. இவரை ஒருமனதாகப் பரிந்துரைத்த நடுவர் குழு : பேராசிரியர் ஆர். இராதாகிருஷ்ணா, பேராசிரியர் பாட்ரிசியா ஓபிராய், பேராசிரியர் மனோரஞ்சன் மொகந்தி. ‘பாலினம் மற்றும் நில உரிமை பற்றிய பெண்ணியப் பொருளாதார ஆய்வுக்கு முன்னோடியான பங்காற்றியவர்’ என்றும் ‘வறுமை, உணவுரிமை, சூழலியல் ஆய்வுகளுக்கு முக்கியப் பங்காற்றியவர்’ என்றும் நடுவர் குழு பீனா அகர்வாலை மதிப்பிட்டுள்ளது.

நவம்பர் 21, 2002இல் விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது. விருதினை ஏற்று, ‘பாலினச் சமத்துவமின்மைகள் : மறைக்கப்பட்ட பரிமாணங்களும் உண்மைகளும்’ என்ற பொருளில் ஆதிசேஷையா நினைவுரையினையும் பீனா அகர்வால் ஆற்றுவார்.

நாதன் ஆராய்ந்துள்ளார். கனடாவில் நடைபெற்ற அனைத்துலகப் பெண்கள் உடல்நலக் கூட்டமைப்பில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டுள்ளார். உலக வங்கியின் உதவியுடன் எழுதப்பட்ட பாலினம்சார் வளர்ச்சியின் வன்முறை என்பது பற்றிய கட்டுரை விரைவில் வெளிவரவுள்ளது. இந்திய மாநிலங்களின் வரவு—செலவுத் திட்டங்களைப் பாலினப் பகுப்பாய்வு நோக்கில் ஆராயும் குழுவிலும் இவர் பங்கு பெற்றுள்ளார்.

முனைவர் வி. சந்திரசேகர நாயுடு கிராம மறுஆய்வுகள் செய்துள்ளார். உணவு நிலை பற்றியும் ஆராய்ந்துள்ளார். உலக வணிக அமைப்பு மற்றும் வேளாண் சந்தை பற்றிய செயல் குழுவிலும் இவர் உறுப்பினர். சென்ற ஓராண்டாக அவர் தமிழக நிதிநிலை பற்றி ஆராய்ந்து வருகிறார். இதன் தொடர்பில் தமிழக அரசுக்கு விரிவானதோர் அறிக்கையினையும் வழங்கியுள்ளார்.

கர்நாடகத்திலும் தமிழகத்திலும் குடிசைத் தொழிலாக நடந்துவரும் பீடி உற்பத்தி பற்றிப் பேராசிரியர் கே. நாகராஜ் ஆராய்ந்துள்ளார். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ.) ஆதரவில் அமைந்த இவ்வாய்வு, அரசு கொள்கை வகுப்பதற்குப் பேரளவில் உதவக்கூடியது.

முனைவர் எஸ். ஜனகராஜனின் நீர் மேலாண்மை ஆய்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறைவுறவுள்ளது. இதன் தொடர்பில் பல மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் உரையாற்றியுள்ளார். கருத்துப் பரவலிலும், களச் செயல்பாடுகளிலும் அவர் ஊக்கம் செலுத்தி வருகிறார். பாலாறு நீர் பயனுரிமையாளர் கலந்தாய்வின் அடிப்படையிலான தமிழ் நூல் ஒன்றையும் அவர் வெளியிடவுள்ளார்.

பெண்களின் உடல்நலமும், பிறப்பு நிலையில் பால் விகிதாசாரமும் பற்றிப் பேராசிரியர் எஸ். சுப்பிரமணியனும் முனைவர் டி. ஜெயராஜூம் ஆராய்ந்துள்ளனர்.

தலித் கிறிஸ்தவர்கள் பற்றிய முனைவர் எம். தங்கராஜின் ஆய்வு நிறைவடையும் நிலையில் உள்ளது. தமிழகத்தில் நில உரிமைச் சீர்திருத்தங்கள் பற்றிய தொகுப்பு நூலையும் மசூரியிலுள்ள தேசிய நிர்வாகக் கழகத்திற்காக அவர் தயாரித்துள்ளார்.

ஒரிசாவில் ஒருங்கிணைந்த கல்வி மற்றும் ஸ்வத்யாயா போன்ற சமூக இயக்கங்கள் பற்றிய ஆய்வை முனைவர் அனந்த குமார் கிரி தொடர்ந்து வருகிறார். இப்பொழுது அவர் இஸ்ரேல் மற்றும் நெதர்லாந்திற்கு ஆய்வுப்பணி நிமித்தம் சென்றுள்ளார்.

**டபிள்யூ.டி.ஓ. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமுன் மாநிலங்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமென மைய அரசாங்கத்தின்மீது தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்குக்காக எம்.ஐ.டி.எஸ். இன் உதவி நாடப்பட்டுள்ளது.**

**டபிள்யூ.டி.ஓ.வும் வேளாண் சந்தையும் பற்றிய மாநிலத் திட்டக் குழுவின் செயற்குழுவில் முனைவர் வி. சந்திரசேகர நாயுடு உறுப்பு வகிக்கிறார்.**

## மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியர்கள்

**முனைவர் உமா சக்கரவர்த்தி, முதலாம் மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியராக ஜனவரி – பிப்ரவரி 2002இல் விளங்கினார். கருத்தரங்க உரை வழங்கியதோடு பொதுக்கூட்டம் ஒன்றிலும் கலந்துகொண்டார்.**

**கார்னல் பல்கலைக்கழகப் பேராசிரியர் கௌசிக் பாசு, ஜூலை 2002இல் மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியராக விளங்கினார். சிறார் தொழில் பற்றியும் 'கேம்' கோட்பாடு பற்றியும் இரு உரைகள் ஆற்றினார்.**

உலக வணிக அமைப்பின் (WTO) பிராந்திய வணிக ஒப்பந்தங்கள் பற்றிக் குவிமையம் கொண்டது முனைவர் மோஅனா பகபதியின் ஆய்வு. பேராசிரியர் நிர்மல் சென்குப்தாவுடன் இணைந்து உலகமய வணிகம் பற்றிய ஆய்வுகளையும் இவர் மேற்கொண்டுள்ளார்.

எம்.ஐ.டி.எஸ்.இல் வளர்ந்துவரும் புதிய ஆய்வுக் களம் பாரம்பரிய அறிவு மற்றும் பாரம்பரிய அறிவு முறைகள் தொடர்பானது. அறிவுச் சொத்துரிமை மற்றும் டபிள்யூ.டி.ஓ. தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள சசக்ஸ் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தில் பேராசிரியர் வி.கே. நட்ராஜ் வருகைப் பேராசிரியராகச் சென்ற கோடையில் பணியாற்றினார். அந்நிறுவனத்தின் வருங்கால அரசு மையத்தின் நிர்வாகக் குழுவிலும் அவர் ஓர் உறுப்பினராக விளங்குகிறார்.

தனியார் பள்ளிகளும் தொடக்கக் கல்வியும் பற்றி முனைவர் மானவி மாஜூம்தார் மற்றும் பேராசிரியர் சுப்பிரமணியன் ஆய்வறிக்கைத் தயாரித்துள்ளனர்.

### நூல்கள்

பேராசிரியர் நிர்மல் சென்குப்தா "A NEW INSTITUTIONAL THEORY OF PRODUCTION - AN APPLICATION" (வெளியீடு : சேஜ், அக்டோபர் 2001.

பேராசிரியர் எஸ். சுப்பிரமணியன், எஸ். குகனின் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். (வெளியீடு : ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம்) இவருடைய "MEASUREMENT OF INEQUALITY AND POVERTY" மறுபதிப்பாகியுள்ளது.

இந்திய ஜனநாயகமும் அரசியலும் பற்றிய கட்டுரைகள் அடங்கிய பேராசிரியர் பி. இராதாகிருஷ்ணனின் "THE PERFIDIES OF POWER: A SOCIAL CRITIQUE" வெளியாகியுள்ளது.

முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி, "நாவலும் வாசிப்பும் : ஒரு வரலாற்றுப் பார்வை" (வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், ஆகஸ்டு 2002).